

# சென்னையில் முதல் முறையாக மாபெரும் பாப் கலாச்சார நிகழ்ச்சி!

சென்னை, 20, ஜூலை:

காமிக் கான் இந்தியா (Comic Con India) நிறுவனம், மிகப் பெரிய பாப் கலாச்சார நிகழ்ச்சியை முதன்முறையாக சென்னையில் நடத்தவுள்ளது. இந்நிகழ்வு 2024–ஆம் ஆண்டு பிப்ரவரி 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த நிகழ்ச்சியில் காமிக்ஸ் (comics}, மங்கா (manga), அனீம் (anime) மற்றும் அனைத்து பாப் கலாசாரம் சார்ந்த நிகழ்வுகளைக் கண்டு மகிழலாம்.

காமிக் கான் இந்தியா நிறுவனம் பாப் கலாசாரத்தின் இந்த மந்திர நிகழ்ச்சியை இம்முறை சென்னை மாநகரில் நடத்த உள்ளது. இந்த நிகழ்ச்சியில் சர்வதேச மற்றும் இந்திய அளவில் மிகப் பிரபலமான காமிக் உருவாக்குனர்கள், பிரபல கலைஞர்கள் மற்றும் முதல்முறையாக இத்தொழில் சார்ந்தவர்கள் சென்னையில் நடைபெறும் இந்நிகழ்வில் பங்கேற்கின்றனர்.

“இந்த நிகழ்வை முதல் முறையாக சென்னையில் நடத்துவது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. கலை மற்றும் பொழுதுபோக்கிற்கு மிகச் சிறந்த இடமாகத் திகழும் சென்னையில், பாப் கலாசார விரும்பிகள், ஆர்வலர்கள் அதிகமுள்ளனர். அவர்களது நினைவில் என்றென்றும் நீங்காத இடம்பெறும் வகையில் இந்நிகழ்வை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம்.

சென்னை நகரின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாப் கலாசாரத்தை பரப்பும் விதமாக இந்நிகழ்வு நடத்தப்படுகிறது” என்று காமிக் கான் இந்தியா நிறுவனத்தின் நிறுவனர் திரு. ஜதின் வர்மா (Mr. Jatin Varma) தெரிவித்துள்ளார்.

# அதிநவீன வசதிகளுடன் கூடிய ரெயில்



நீலகிரி மாவட்டம் உதகையில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக அதிநவீன வசதிகளுடன் கூடிய ரெயிலினை மத்திய அமைச்சர் எல். முருகன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்வில் சுற்றுலா பயணிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# பியூர் இவி-யின் புதிய இவி டீலர்ஷிப் ஷோரூம் திறப்பு

கோவை, 20, ஜூலை : நாட்டிலுள்ள முன்னணி இரு சக்கர மின்–வாகன (EV2W) அசல் உபகரண உற்பத்தியாளர்களில் (OEM) ஒன்றான பியூர் இவி, தனது புதிய EV டீலர்ஷிப்பான பாலாஜி இ பைக்ஸை தமிழ்நாட்டில் திண்டுக்கல்லில், என். சந்திரசேகரன் (தொழிலதிபர்) முன்னிலையில் திறந்துள்ளது. தமிழ்நாட்டில் திண்டுக்கல்லில் அமைந்துள்ள ஷோரூம், பியூர் பிராண்டின் மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர்களின் வகைகளை காட்சிப்படுத்துகின்ற பிரீமியம் அனுபவ மையமாகும்.

திண்டுக்கல்லில் பியூர் இவி-இன் டீலர்ஷிப் திறப்பு விழாவில், பியூர் இவி -இன் தலைமைச் செயல் அதிகாரி ரோஹித் வதேரா கூறியது, "பல ஆண்டுகளாக நாங்கள் காண்பித்துவரும் அசைக்க முடியாத உறுதிப்பாடு மற்றும் விடாமுயற்சிக்கான குறிப்பிடத்தக்க சான்றாக எங்கள் பிராண்டின் மதிப்பின் சாதனை உள்ளது. பியூர் இவி-இல் தொழில் திறனில் சிறந்து விளங்கும் மற்றும் சிறந்த தரத்தை நிலைநிறுத்தும் டீலர்களுடன் கூட்டணி வைத்துகொள்வதற்கு முன்னுரிமை அளிக்கிறோம். தென்னிந்தியாவில் செழிப்பாக உள்ள எங்கள் விற்பனை மற்றும் சேவை நெட்வொர்க் பரவலான பாராட்டைப் பெற்றுள்ளது. மேலும் நாடு முழுவதும் உள்ள பல பிராந்தியங்களில் எங்கள் டீலர்களை விரிவாக்கும் முன்முயற்சியின் மூலம் இந்த வெற்றியை விரிவுபடுத்தவும் நாங்கள் தயாராக உள்ளோம். .இந்த வலுவான உத்வேகம் 2023 ற்குள் 300 நகரங்களில் முக்கிய இருப்பை நிறுவும் எங்கள் லட்சியத்தை நோக்கி செல்ல தூண்டுவதன் மூலம் எங்களை உச்சக்கட்டத்திற்கு ஏற்றிவிடும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.”

உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தயாரிப்பு களின் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் சேவை நெட்வொர்க்கின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியவாறு திரு ரோஹித் வதேரா மேலும் கூறியது, “பியூர் இவி அதன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) மையத்தில் தயாரிப்பு வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காகவே ஒரு வலுவான குழுவை வளர்த்துள்ளது. சராசரி இந்திய வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புகளை மனதில் கொண்டு நிறுவனத்தின் முக்கிய R&D நடவடிக்கைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. தொழில்துறை முன்னணி நடைமுறைக்கு ஏற்ப தேவையான அனைத்து கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் அதிநவீன பட்டறைகளை அமைத்து, எங்கள் மதிப்பு மிக்க வாடிக்கையாளர்களுக்கு சிறந்த விற்பனைக்குப்பிந்தைய சேவை அனுபவம் கிடைப்பதை நாங்கள் உறுதிசெய்வோம்.”

# தசை வலிமையை உருவாக்குதல்: தசை இழப்பைத் தடுப்பதில் ஊட்டச்சத்தின் பங்கு



அன்றாட வாழ்வில் இன்றியமையாத செயல்பாடுகளைச் செய்வதில் உங்கள் தசைகள் பெரும் பங்குவகிக்கின்றன. படுக்கையில் இருந்து எழுந்திருத்தல், நடைபயிற்சி, ஓட்டம் மற்றும் தினசரி பணிகளின் இறுதிக்கோட்டைக் கடப்பது வரை உங்கள் அன்றாட செயல்பாடுகளுக்கு தசைகளின் பங்கு இன்றியமையாத்தும். இருப்பினும், 40 வயதில் தொடங்கி, பெரியவர்கள் ஒரு தசாப்தத்திற்கு 8 சதவீத தசை நிறையை இழக்க நேரிடும், மேலும் 70 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த விகிதம் இரட்டிப்பாகும்.

மும்பையின் வோரா கிளினிக்கின் மூத்த ஆலோசகர் மார்பு மருத்துவர் மற்றும் மருத்துவ இயக்குநரான பேராசிரியர் டாக்டர் அகம் வோரா, உங்கள் தசைகளைப் பற்றி அதிகம் அறியப்படாத உண்மைகளின் பட்டியலைத் தொகுத்துள்ளார், மேலும் நீங்கள் வயதாகும்போது சரியான ஊட்டச்சத்து மூலம் உங்கள் தசை ஆரோக்கியத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பதற்கான சில குறிப்புகளையும் வழங்குகிறார்.

உங்கள் தசைகளின் நிலை மற்றும் உயிர்ச்சக்தி ஆகியவை தசையின் நல்வாழ்வையும் தாண்டி பல சாத்தியமான உடல்நல அபாயங்களின் குறிகாட்டியாக செயல்படும். தி லான்செட்டில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வில், சிஸ்டாலிக் இரத்த அழுத்தத்தை விட தசை வலிமை ஆபத்தான இருதய நோய் அபாயத்தை மிகவும் துல்லியமாக தீர்மானிக்க முடியும் என்று கண்டறியப்பட்டது. கூடுதலாக, அதிக தசை நிறை கொண்ட நாள்பட்ட தடுப்பு நுரையீரல் நோய் (COPD) உள்ளவர்களும் சிறந்த சுவாச விளைவுகளை அனுபவிக்க வாய்ப்புள்ளது.

ஒன்றாக, தசைகள் ஒரு பெரிய உறுப்பு போல வேலை செய்கின்றன, இயக்கம், சமநிலை, வலிமை மற்றும் வளர்சிதை மாற்றத்தை பாதிக்கின்றன. மேம்பட்ட தசை இழப்பு அல்லது சர்கோபீனியா உள்ளவர்கள், குறிப்பாக நாட்பட்ட நோய்களுடன் வாழ்பவர்களுக்கு பாதகமான உடல்நல விளைவுகளை ஏற்படுத்தலாம்.

தசை நிறை மற்றும் வலிமை ஆகியவை ஆரோக்கியத்தின் முக்கிய குறிகாட்டிகள். இரத்த அழுத்தம் அல்லது இதயத் துடிப்பின் வழக்கமான மதிப்பீடுகளைப் போலவே, ஒரு மருத்துவரால் அவை தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும். வலுவான நோயெதிர்ப்பு மண்டலத்தை உருவாக்குவதில் தசைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தசை திசு நோயெதிர்ப்பு உயிரணுக்களை செயல்படுத்துவதில் தீவிரமாக பங்களிக்கிறது என்பதை அறிவியல் ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன, மேலும் குறைந்த தசை நிறை மற்றும் வலிமை கொண்ட நபர்கள் நோயெதிர்ப்பு செயல்பாடு குறைவதை அனுபவிக்கலாம். சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை பராமரிப்பது ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் நன்மை பயக்கும்.




# சுய-சேகரிப்புப்பரிசோதனை, சுகாதாரப் பாதுகாப்பு சேவைகள் லைஃப் செல் இண்டர்நேஷனல் அறிமுகம்

சென்னை, ஜூலை 20 –இந்திய மூல உயிரணு வங்கியியல் மற்றும் உயிரி தொழில்நுட்பம் ஆகியவற்றில் முன்னணி வகிக்கும் லைஃப் செல் இண்டர்நேஷனல், இனப்பெருக்க, பாலின, பெண்கள், குழந்தைகள் நலச் சேவைகளின் கீழ், சுய–சேகரிப்புப் பரிசோதனை மற்றும் பாதுகாப்புக் கருவிகளை அறிமுகப்படுத்தி உள்ளது.

இது குறித்து லைஃப்செல் இண்டர்நேஷனல் மேலாண் இயக்குனர் மயூர் அபயா கூறுகையில் ‘கருவுறாமை இந்தியாவில் மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மக்கள் தொகையில் 10%–14% கருவுறாமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 2.75 கோடி தம்பதிகள் கருவுறுவதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் ஐஎஸ்ஏஆர் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால், கருவுறாத 1%க்கும் குறைவான தம்பதிகள், அதாவது 275000 தம்பதிகள் மட்டுமே, இதற்கான சிகிச்சை எடுத்து வருகின்றனர். இந்தியாவில் பாலினம் மற்றும் இனப்பெருக்கச் சுகாதார விஷயங்கள் விவாதிக்கக் கூடாதவையாக விளங்குகுகின்றன. இது தொடர்பான சுகாதாரப் பிரச்சினைகள் சமூகக் களங்கமாகவும் கருதப்படுகின்றன. இந்திய ஆண்களும், பெண்களும் திருமணத்தைத் தள்ளிப்போடுவதும், பணி நிமித்தம் காரணமாகக் கருவுறுவதைத் தாமதப்படுத்துவதுமே, பிரச்சினையை இன்னும் தீவிரமாக்குகிறது. எனவே, லைஃப்செல் இண்டர்நெஷனல் நிறுவனத்திலுள்ள நாங்கள், ஸ்பெர்ம்ஸ்கோர், ஓவாஸ்கோர், இன்ஃபெர்ஜீன்ஸ் உள்ளிட்ட சுகாதாரத் தீர்வுகளை முதன் முதலாகச் சந்தையில் அறிமுகப்படுத்தித், தம்பதிகளின் கருவுறுத் தன்மையை அவர்களுக்குப் புரிய வைக்க உதவுகிறோம் என கூறினார்.

## பத்திரம் காணவில்லை

புதுவை மாநிலம், உழந்தை முதலியார்பேட், தீரன் சத்தியமுர்த்தி நகர், வாரியார் நகர்,என்ற முகவரியில் வசிக்கும்(லேட்)தட்ஷணாமூர்த்திமனைவிஅலமேலுஆகிய நான் கடந்த 18.04.2023 ம் தேதி அன்று எனக்கு சொந்தமாக அசல் கிரைய பத்திரத்தை பத்திரம் எண்:757/1982, என்ற ஆவணத்தை பதியப்பட்டு பத்திரங்களை எடுத்துக் கொண்டு காலை சுமார் 12.00 மணியளவில் பனமலைபேட்டை கிராமத்திற்கு நிலம் விற்பணை சம்மந்தமாக தனது கிரையப்பத்திரததை ஒரு ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்கசென்றபோது தனது கிரையப்பத்திரதை எங்கோ தொலைந்துவிட்டது. பின்னர் அருகில். மேற்படி இது சம்மந்தமாக பல இடங்களில் தேடிபார்த்தும், அங்கு இருந்தவர்களிடம் கேட்டுப்பார்த்தும் எனது அசல் கிரைய பத்திரம் கிடைக்கவில்லை. மேற்படி இது சம்மந்தமாக நான் அனந்தபுரம் காவல் நிலையத்தில் இணையதளம் வழியாக கடந்த 15.07.2023ம் தேதி புகார் மனு கொடுத்திருந்தேன் அதன் சி.எஸ்.ஆர் எண்:CAD23127925 ஆகும் எனது கிரைய பத்திரம் கிடைத்தால் தகவல் தொடர்புக்கு செல் எண்: 9629426284.

இப்படிக்கு
D.அலமேலு



# வேட்டவலம் வள்ளலார் திருச்சபையில் 318 மாதம் பூச அன்னதான விழா

வேட்டவலம் ஜூலை, 20,

வேட்டவலம் களத்துமேட்டு தெருவில் அமைந்துள்ள வள்ளலார் திருச்சபையில் 318 ஆம் மாத பூச அன்னதான விழா காலை 8:30 மணியளவில் கொடியேற்றி அகவல. பாராயணத்துடன் விழா தொடங்கியது. அனைவரையும் வள்ளலார் திருச்சபை செயலாளர் பச்சையம்மாள் சரவணன் வரவேற்றார். மாதவ.சென்ராஜ் தலைமையில் விழாதொடங்கியது.காலை9.30மணிஅளவில் திருவருட்பா உரையரங்கு தெய்வமணி மாலையின் சிறப்புகள் தலைப்பில் தங்க. விஸ்வநாதன் உரையாற்றினார். 10.00 மணியளவில் வாழ்த்து அரங்கம் 44 ஆம் ஆண்டு திருமண விழா காணும் நல்ல. பன்னீர்செல்வம் வசந்தி அவர்களுக்கு வள்ளலார் திருச்சபை சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது. வாழ்த்துரை வழங்கியவர்கள் மண்ணுலிங்கம், மாதவ.சின்ராஜ், வாசுதேவன், குப்பன், தங்க.விஸ்வநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். 11.00 மணிக்கு திருக்குறள் உரையரங்கம் குப்பன் தலைமையில் இரவு தலைப்பில் அன்பரசியும், இரவச்சம் தலைப்பில் மா.ஏழுமலையும் உரையாற்றினார்கள்.

12.00 மணி அளவில் பெரிய புராண உரையரங்கு சைவ நெறி காவலர் தங்க. விஸ்வநாதன் தலைமையில் வேங்கட ரமேஷ்பாபு முன்னிலையில் எரிபத்தர் தலைப்பில் முத்து பிரேமாவும் ஏனாதிநாதர் தலைப்பில் மங்கையற்கரசிகாசி உரையாற்றினார்கள்.

காலை,மாலை, இரவு சுமார் 500 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை காமாட்சி சுப்பிரமணிய பாரதியார், பச்சையம்மாள் சரவணன், மனோன்மணி முருகன் ஆகியோர் செய்திருந்தனர்.



# வீராணம் ஏரியில் கட்டப்பட்டுள்ள எதிர்ப்பாசன மதகில் ஷட்டர் பொருத்த விவசாயிகள் கோரிக்கை

சேத்தியாத்தோப்பு- ஜூலை, 20,

கடலூர் மாவட்டம் வீராணம் ஏரியில் தற்போது நீர்வரத்து துவங்கி உள்ள நிலையில் ஏரியின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஏரியில் பல இடங்களில் ஷட்டர்கள் ஒருத்தி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து மூடும் நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் விவசாயிகளும் தங்களுக்குத் தேவையான நீரைப்பெற்று பயனடைந்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் கடந்த ஓராண்டுக்கு முன்பு வீராணம் ஏரியின் மேற்குப் பகுதி கரை

குடிகாடு கிராமப் பகுதியில் எதிர்பாசன மதகு சேதம் அடைந்தது. இந்த மதகு மூலம் குடிகாடு மற்றும் அதன் சுற்றுப்புற கிராம விவசாயிகள் பாசனம் பெற்று வந்த நிலையில் இந்தப் பாசன மதகு சேதமடைந்ததையடுத்து விவசாயிகள் வைத்த கோரிக்கையின் படி சேதமடைந்த மதகை அகற்றிவிட்டு புதிய பாசன மதகு அமைக்கப்பட்டது. மதகு அமைத்தாயிற்று இனிமேலும் பிரச்சனை இல்லை என்று நினைத்த விவசாயிகளுக்கு அதில் ஷட்டர் பொருத்தாமல் போனதால் விவசாயிகள் ஏமாற்றம்அடைந்தனர்.

வீராணம் ஏரியில் முழுவதும் நிரம்பும் தண்ணீரானது தானாகவே இந்த மதகு வழியாக வயல்களுக்கு நுழைந்து விடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த பாசன மதகு தண்ணீரைத் தேவைப்படும் போது திறப்பதற்கும், தேவையில்லாத போது அடைப்பதற்கும் ஷட்டர் பொருத்தவில்லை. இது குறித்து அதிகாரிகளும் மாவட்ட நிர்வாகமும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஷட்டர் அமைத்து தரவேண்டும் என்று கோரிக்கை வைத்துவருகின்றனர். வீராணம் ஏரி முழுகொள்ளளவை எட்டும்போதும் மற்றும் மழை வெள்ள காலங்களிலும் இந்த பாசன மதகில் ஷட்டர் இல்லாததால் தண்ணீர் தானாகவே விவசாய விளைநிலங்களுக்குள் புகுந்து கடும் பாதிப்பை ஏற்படுத்தி விடவும் வாய்ப்புண்டு என்று விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

SPECIAL COURT NO. II
BEFORE THE MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL AT CHENNAI
M.C.O.P.No. 5295/2022

G.Hemavathi and 4 others ...petitioners

Vs

1) Nayagam Albert
2) ICICI Lombard Gen.Ins.Co Ltd ...respondents

To
Nayagam Albert
S/O Peter
No. 1/137, Thalambur main road,
Karanai Navalur
Chennai–603103

The Hon'ble motor accident claims tribunal (Special Court No.II), Chennai has been pleased to order notice to you to appear before the said court on 14–08–2023 at about 10:00AM. Please take notice, unless you appear before the said court on the said day, the above case will be decided in your absence.

M.Maruthupandiyan
Counsel for petitioner

**IndoStar Home Finance Private Limited**

Regd. Office: - Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093
CIN : U65990MH2016PTC271587 Tel: +91 22 45107701
Email: contact@indostarhfc.com; Website: www.indostarhfc.com

**அறிவிப்பு**

2021 ஆம் ஆண்டின் முதன்மை திசை வங்கி அல்லாத நிதி நிறுவன வீட்டு நிதி - நிறுவனம் (ரிசர்வ் வங்கி) திசைகள், 2021 இன் பத்தி 93 இன் படி, நிறுவனத்தின் கிளை அலுவலகம் 2வது மாடியில், சாகித்யன் இணைப்பு கட்டிடம் எண். 22 & 23 இல் உள்ளது. வெங்கடநாராயணன் சாலை, தி. நகர், சென்னை - 600 017, அக்டோபர் 20, 2023 அன்று வணிக நேரத்துடன் மூடப்படும். ஏதேனும் உதவி தேவைப்பட்டால், மேலே குறிப்பிட்டுள்ளபடி அருகிலுள்ள கிளை அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம் அல்லது தொடர்பு கொள்ள மின்னஞ்சல் அனுப்பலாம். @indostarhfc.com.

இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்தில் (www.indostarhfc.com) அணுகலாம்

Sd/-
இந்தோஸ்டார் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
நிதி சதானி
நிறுவனத்தின் செயலாளர்

நாள்: 19-07-2023

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பாலக்கோடு
I.A.No.1 / 2022 in O.S No.72/2020

F. ஷாஸியா பானு
க/பெ. A.J. பயாஸ் ஆகமத்,
க.எண்.27/42, பழைய வார்டு 12
புதிய வார்டு எண்.11,
அப்துல் கரீம் தெரு,
பாலக்கோடு அஞ்சல்,
பின்: 636 808
தர்மபுரி மாவட்டம்.
...மனுதாரர் / வாதி

/ VS/

1) சமியுல்லா ஷெரிப், த/பெ. அப்துல்லா ஷெரிப், க/எண்.64, சுபா அபார்ட்மெண்ட், ஹலேஹள்ளி கிராமம், ஆனேக்கல்– வட்டம், பெங்களூர் மாவட்டம், கர்நாடகா மாநிலத்தில் வசித்து வந்து தற்போது, தர்மபுரி மாவட்டம், தர்மபுரி டவுன் க/எண்.25, HIG–லைன், வேடி ராஜம்மாள் இல்லம், சர்வீஸ் ஹவுஸ், திடக்கழிவு மேலாண்மை உரக்கிடங்கு எதிரில், ஹவுசிங் போர்டு, வெண்ணாம்பட்டி ரோடு, தர்மபுரியில் வசித்து வருகிறார்.

2) ஷாயிரா பானு
க/பெ.சமியுல்லா ஷெரிப்
( மேற்படி விலாசத்தில் வசிக்கும் நபர்)
... எதிர்மனுதாரர்/ பிரதிவாதிகள்

மனுதாரர் தரப்பில் கொடுக்கும்
பொது அறிவிப்பு

மேற்படி வழக்கில் மனுதாரர், எதிர்மனுதாரர்கள் பேரில் நிரந்தர உறுத்துக் கட்டளை சம்பந்தமாகவும், தாவா சொத்தில் எதிர் மனுதாரர்கள்/ எவ்வகையிலும் சட்ட விரோதமாக பிரவேசிக்காமலும், மனுதாரரின் நிம்மதியான வாழ்க்கைக்கு இடையூறு தராமலும், எதிர் மனுதாரர்களால், மனுதாரருக்கு ஏற்பட்ட கடன் மற்றும் வட்டியை எதிர் மனுதாரர்களே ஏற்று, மனுதாரரின் கஷ்ட நஷ்டத்திற்கு ஏற்ப உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென, மனுதாரரால் சிவில் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி எதிர் மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக பலதடவை படிக்கட்டி சர்வ் ஆகாததால், நாளிதழ் விளம்பரம் செய்ய உத்தரவு ஆகி இருந்தது. எதிர்வரும் 27.07.2023 அன்று காலை 10.00 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூல மாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம், இல்லையேல், ஒருதலைப் பட்சமாக தீர்ப்பாகிவிடும் என்பதை இந்த அறிவிப்பில் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
இரா. ஐயப்பன், பி.ஏ.பி.எல்.,
வழக்கறிஞர்
105, செக்குமேடு, பென்னாகரம்
பின்: 636 818 Cell:63790 62002